## முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

**அசல் வழக்கு எண். 90/2023**

**வா.சா.1**

நாள்: **04.06.2024**

2024ம் ஆண்டு ஜுன் திங்கள் 04ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய திரு.ராஜேந்திரன் என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி திரு. எஸ். குமரகுரு, பி.எல்., ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேந்திரன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கின் வாதி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

<u>ஆவணங்கள்</u>

1) 29.11.1948ல் உலகப்பநாடார் ராமநாடாருக்கு ஏற்படுத்திக்கொடுத்த கிரையப்பத்திரம் ஆன்லைன் காப்பி வா.சா.ஆ.1,
2) 17.05.2023ல் 01.01.1948 முதல் 31.12.1957 வரை உள்ள காலங்களுக்கான வில்லங்க சான்றிதழ் அசல் வா.சா.ஆ.2,
3) சர்வே எண்.40/1B சொத்திற்கான ஏ பதிவேடு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3,

4) 09.04.2008 ல் சுப்ரமணியன் வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் ஆன்லைன் காப்பி வா.சா.ஆ.4,

5) 27.05.2010 ல் புஸ்பவள்ளி வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் ஆன்லைன் காப்பி வா.சா.ஆ.5,

6) பட்டா எண்.3015 க்குண்டான தண்டத்தீர்வை ஆன்லைன் காப்பி வா.சா.ஆ.6,

7) தாவா சொத்திற்கு வாதி வரி செலுத்திய ரசீது அசல் வா.சா.ஆ.7,

8) 20.08.1952 ல் உலகப்பநாடானின் மனைவி மற்றும் மக்கள் ஆகியோர்களுக்கிடைய ஏற்பட்ட பாக பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8,

9) அசல் வழக்கு எண்.31/2010 க்குண்டான பிராது சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9,

10)அசல் வழக்கு எண்.31/2010 க்குண்டான தீர்ப்புரை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.10,

11) 30.08.2021 ல் அசல் வழக்கு எண்.31/2010 ல் ஏற்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.11,

12) அசல் வழக்கு எண்.31/2010 ல் நீதிமன்ற ஆணையாளர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை மற்றும் வரைபடம் வா.சா.ஆ.12 ஆகும்.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .